**IN THE COURT OF DISTRICT MUNSIF, GUDIYATTAM, VELLORE DISTRICT.**
**OS.No. 25/2021**

| DEPOSITION OF WITNESS | DW.1 |
|---|---|

| NAME | SELVAM | TALUK | |
|---|---|---|---|
| FATHER NAME | | RELIGION | |
| AGE | | CASTE | |
| VILLAGE | | OCCUPATION | |

Solemnly affirmed in accordance with the provisions Act of 1873 on the day of 09-06-2025

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை :-**

1. ராஜரத்தினம் தாக்கல் செய்த இந்த வழக்கின் வாதுரையை நான் பெற்றுக்கொண்டேனா என்றால் பெற்றுக்கொண்டேன். வாதி தாக்கல் செய்த வழக்கு விவரங்களை முழுவதுமாக படித்து தெரிந்துகொண்டேனா என்றால் தெரிந்துகொண்டேன். வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள 11 ஆவணங்களின் விவரங்களை தெரிந்துகொண்டேனா என்றால் தெரிந்துகொண்டேன். என்னிடம் காட்டப்படுவது தான் நான் இவ்வழக்கில் தாக்கல் செய்த பதிலுரை என்றால் சரிதான். இந்த வழக்கில் வாதி தரப்பில் தாக்கல் செய்த 11 ஆவணங்களை குறியீடு செய்ததை தெரிந்துகொண்டேன் என்றால் தெரிந்துகொண்டேன்.

2. வாதியை எனது தரப்பில் குறுக்கு விசாரணை செய்தோம் என்றால் சரிதான். எனது வாக்குமூலத்தை முதல் விசாரணை ஆவணமாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். வாதி வழக்குரை பத்தி 2ல் 1 முதல் 5 வரையான விவரங்களை நான் ஆக்கிரமிப்பு செய்ததாக கூறியுள்ளதை எனது பதிலுரையில் நான் மறுக்கவில்லை என்றால் மறுக்கவில்லை, அந்த பொருட்களை என்னுடைய இடத்தில் தான் நான் போட்டுள்ளேன்.

3. நான் தாக்கல் செய்த பிரமாண வாக்குமூலத்திலும் அதுகுறித்து மறுப்பு தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். வாதியின் நிலத்தை ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக சொல்லியுள்ள நிலையில் பட்டா மற்றும் FMB குறித்து நான் புகார் ஏதாவது செய்துள்ளேனா என்றால் இல்லை. வாதி தரப்பு வழக்கு பொய் என நிரூபிக்க ஆவணம் ஏதாவது நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை, ஆவணங்கள் உள்ளது.

4. என்னிடம் ஆவணங்கள் இல்லை என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது பிரமாண வாக்குமூலத்தில் வாதியின் இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என எவ்வாறு சொல்கிறேன் என்றால் 1991 மற்றும் 1998-ல் நான் சொத்தை வாங்கிய பிறகு தற்போது வாதி 2020-ல் சொத்தை வாங்கியதாக சொல்வதால் சொல்கிறேன்.

5. வாதி 27.01.2020 அன்று கிரயப்பத்திரம் மூலம் வாங்கிய சொத்துவிவரம் குறித்து நான் ஏதாவது வழக்கு போட்டுள்ளேனா என்றால் இல்லை. இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென மனு ஏதாவது போட்டேனா என்றால் இல்லை. வழக்கு சொத்தில் சொத்துவிவரம் தவறாக உள்ளது என மாற்றம் செய்ய மனு ஏதாவது போட்டேனா என்றால் இல்லை. வாதி பெயரிலுள்ள கிரயப்பத்திரத்தை ரத்து செய்ய நடவடிக்கை ஏதாவது எடுத்தேனா என்றால் இல்லை.

6. வாதிக்கு சொத்தை விற்பனை செய்த நபர்களுக்கு உரிமை இல்லை என நடவடிக்கை ஏதாவது எடுத்தேனா என்றால் இல்லை. தவறான பத்திரங்கள் அடிப்படையில் உரிமை கோரியதாக சொல்லியுள்ள நிலையில் அதுகுறித்து அதிகாரிகளிடம் புகார் செய்துள்ளேனா என்றால் இல்லை. சர்வே எண்.12/5 சொத்தானது கோவிந்தராஜி, சந்திரம்மாள் மற்றும் சுகுணாம்மாள் ஆகியோருக்கு பாத்தியப்பட்டது என்பதற்கு ஆதாரமாக எந்த ஒரு ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், ஆவணம் உள்ளது.

7. வாதியின் வழக்கை குழப்ப வேண்டும் என்ற எண்ணத்தில் குழப்பமான இந்த வாக்குமூலத்தை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கு எவ்வளவு சொத்து கிடைத்தது என்றால் மொத்தம் 600 சதுரடி கிழக்கு மேற்கு 10 அடி, வடக்கு தெற்கு 60 அடி. தனியாக இன்னொரு பத்திரம் மூலம் 105 சதுரடி கிழக்குமேற்கு 3–1/2 அடி, தெற்கு பக்கம் 60 அடி, வடக்குபக்கம் 0 பாய்ண்ட் உள்ளது. நான் 105 சதுரடி சொத்து உள்ளதாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் அப்படி இருந்திருந்தால் ஆவணத்தை தாக்கல் செய்திருப்பேன் என்றாலும் அவ்வாறு ஆவணம் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆவணம் உள்ளது.

8. என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் சொல்லப்பட்டுள்ள பகுதிகள் நான் ஆக்கிரமிப்பு செய்தவை என்றால் சரியல்ல, அவை என்னுடையது. 04.05.2015ல் செட்டில்மெண்ட் படி எனக்கு எவ்வளவு சுவாதீனம் கொடுத்தார்கள் என்றால் 600 சதுரடி கொடுத்தார்கள். 27.07.2020 அன்று நான் ஆக்கிரமிப்பு செய்ததாக வாதி மூலம் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியதை பெற்றுக்கொண்டேனா என்றால் பெற்றுக்கொண்டேன் அதற்கு பதிலும் கொடுத்துள்ளேன். அந்த அறிவிப்பை நெடுஞ்சாலைத்துறைக்கு கொடுத்து அவர்கள் வந்து ஆக்கிரமிப்பை அகற்ற நடவடிக்கை எடுத்தார்கள் என்றால் சரிதான், வந்தார்கள் மேலே போடப்பட்டுள்ள கூரையை அகற்ற சொன்னார்கள்.

9. வாதி குடியாத்தம் நகர காவல்நிலையத்தில் புகார் கொடுத்து போலிசார் வாதி மற்றும் என்னை நீதிமன்றத்தில் பலன் அடைந்துகொள்ள அறிவுறுத்தினார்கள் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் வாதி தரப்பில் நெடுஞ்சாலைதுறையை விசாரித்து 8 ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டது பற்றி தெரிந்துகொண்டேனா என்றால் இல்லை. நான் எனது உரிமைக்கு எதிராக வாதியின் இடத்தில் தாவாவில் சொல்லப்பட்டுள்ள 1 முதல் 5 வரையான ஆக்கிரமிப்புகளை செய்துள்ளேன் என்றால் சரியல்ல, எனது இடத்தில் செய்துள்ளேன்.

10. எனது ஆக்கிரமிப்பை அகற்றக்கோரி வாதி தாக்கல் செய்துள்ள இந்த தாவாவை ஒப்புக்கொள்கிறேனா என்றால் இல்லை. எனது பதில் மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் விளம்புகை பரிகாரம் கேட்க வேண்டும் என தாக்கல் செய்துள்ளது தவறு என்றாலும், நீதிமன்றத்தை குழப்ப வேண்டி அவ்வாறு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வாதியின் தாவா பரிகாரப்படி செலவுத்தொகையுடன் எனக்கு எதிராக வழங்கப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

Sd/–Thiru.K.Karthick Asath,
District Munsif,
Gudiyattam.